# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 2001 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரி (திருத்தச்) சட்டம்

---

(2001 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

2001, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 01, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 6.50 தபாற் செலவு : ரூபா 3.50

# 2001 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரி (திருத்தச்) சட்டம்

[2001 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.– ஓ. 20/2001
4613

**1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

கருக்கப்பெயர்.

1. இச்சட்டம் 2001 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், 2000 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :–

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "சைபர் வீதமிடப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "சைபர் வீதமிடப்படுதல் வேண்டும் ;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :–

"(ஈ) பின்வரும் எவையேனும் சேவைகள் சைபர் வீதமிடப்படுதல் வேண்டும் –

(i) முற்றிலும் இலங்கைக்கு வெளியே பயன்படுத்தப்படுவதற்கென அத்தகைய ஆளினால் உருவாக்கப்பட்டதும் அதற்கென வெளிநாட்டு நாணயத்தில் வங்கி

ஒன்றுக்கூடாகக் கொடுப்பனவு பெறப்படுவதுமான மென்பொருள் தொடர்பில் கணனி மென்பொருள் உருவாக்குநர் ஒருவரின் சேவைகள், அத்தகைய சேவைகள் வழங்கப்படுதலைப்பற்றி ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியுறும் வகையில் ஆவணச்சான்று முன்வைக்கப்படுமிடத்து மாத்திரம் ;

(ii) வங்கி ஒன்றுக்கூடாக வெளிநாட்டு நாணயத்திலான கொடுப்பனவு பெறப்படும் இலங்கைக்கு வெளியே இனம் காணப்பட்ட ஒரு வாடிக்கையாளருக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு பிரத்தியேகமாக அத்தகைய சேவைகளை வழங்குவதற்கென 2001 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் நிறுவப்பட்ட தொழில் முயற்சியொன்றினால் இணையத்தின் ஊடாக அல்லது தொலைபேசி ஊடாக வழங்கப்படும் வாடிக்கையாளர் ஆதார சேவைகள் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** இரண்டாயிரமாம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :

(1) "அத்தகைய மீளளிப்பு வருமதியாகும் அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் இறுதியில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய மீளளிப்புக்கான விண்ணப்பம் செய்யப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் இறுதியில்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவுக்கான காப்பு வாசகத்தின் (அ) என்னும் பந்தியில் "நேர்முன்னராகவரும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "முன்னராகவரும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

4. 1998 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட் பிரிவுக்கான காப்புவாசகத்தை நீக்குஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"ஆயின், எவ்வாறாயினும் 22 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ) அல்லது (ஈ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்டவரான பதிவுசெய்யப் பட்ட ஆளொருவரால் மிதமிஞ்சிச் செலுத்தப்பட்ட ஏதேனும் அத்தகைய தொகை, வரிவிதிக்கப்படற் பாலதான காலப்பகுதியின் இறுதி அல்லது மிகை ஏற்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கான விரைத்திரட்டு கிடைக்கப்பெற்ற திகதி என்பவற்றுள் எது பிந்தியதோ அதிலிருந்து ஒரு மாதத்திற்குள் அவ்வாளுக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.".

5. 2000 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவு, "வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதி" என்பதன் வரைவிலக்கணத்தின் (அ) என்னும் பந்தியில் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பந்தியின் (V) ஆம் உட்பந்தியில், "அட்டவணை யின்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "2001 ஏப்பிறல் 1 ஆம் திகதிக்கு முன்னர், அட்டவணையின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பந்தியின் இறுதியில் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன்மூலமும் :—

"(VII) ஆளெவரும் அட்டவணையின் (XXVIII) ஆம் விடயத்தில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளவாறு முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளதுடன் அத்தகைய ஆள் 2001 மாச்சு 31 ஆம் தேதியளவில் உடன்படிக்கை தொடர்புறுத்தும் கருத்திட்டத்தின் கீழ் வரிவிதிக்கற்பாலதான வழங்கல் கள் செய்வதனைத் தொடங்க முடியாதவராயிருந்த விடத்து.".

முதன்மைச் சட்ட வாக்கத்திற்கான அட்டவணையைத் திருத்துதல்.

6. இரண்டாயிரமாம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக் கத்திற்கான அட்டவணை இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அட்டவணையின் (XXIII) ஆம் விடயத்தில் "முப்பது பிரயாணிகளின் ஆசனங்களுக்குக் குறையாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருபத்தெட்டு பிரயாணிகளின் ஆசனங்களுக்குக் குறையாத" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அவ்வட்டவணையின் (XXVIII) ஆம் விடயத்தில், "உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பொருளின் இறக்குமதி" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :—

"(அ) (i) கருத்திட்டம் பூர்த்தியானதன் பின்னர் வரிக்குப் பொறுப்பான வழங்கல்களை மாத்திரம் செய்யும் எவரேனும் ஆளின் விடயத்தில், நியமித்த தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு ;

(ii) கருத்திட்டம் பூர்த்தியானதன் பின்னர் விலக்களிக்கப்பட்ட வழங்கல்களை மாத் திரம் செய்யும் ஆளொருவரின் விடயத்தில், நியமித்த தேதியிலிருந்து நான்கு ஆண்டு களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு ; அல்லது

(ஆ) கருத்திட்டம் பூர்த்தியாகும்வரை,

இவற்றுள் எந்தக் காலப்பகுதி முந்தியதோ அந்தக் காலப்பகுதிக்கு உடன்படிக்கையில் குறித்துரைக் கப்பட்ட ஏதேனும் பொருளின் இறக்குமதி ;";

(3) அவ்வட்டவணையின் (XXXII) ஆம் விடயத்தை நீக்கம்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும் :—

"(XXXII) இரண்டாயிரத்து ஒன்று ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச்

சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ள தொழில்முயற்சியொன்றினால் வழங்கப்படுவதும் அத்தகைய உடன்படிக்கை தொடர்புறுத்தும் கருத்திட்டத்தின் மொத்தச் செலவு பத்து மில்லியன் ஐக்கிய அரசு டொலர்களுக்கு அல்லது வேறு ஏதேனும் நாணயத்தில் அதற்குச் சமமான தொகைக்குக் குறையாததும் அத்துடன் கருத்திட்டம் பிரத்தியேகமாக மேற்கூறப்பட்ட வழங்கலை, குத்தகையை அல்லது வாடகையைத் தொடர்புறுத்துகின்றதுமான வதிவிட வசதியின் வழங்கல், குத்தகை அல்லது வாடகை தவிர்ந்த, வதிவிட வசதியின் வழங்கல், குத்தகை அல்லது வாடகை."; அத்துடன்

(4) அவ்வட்டவணையின் (XXXIV) ஆம் விடயத்தை நீக்கம்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :—

"(XXXIV) இரண்டாயிரத்து ஒன்று ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ள மருத்துவ நிறுவனமொன்றினால் வழங்கப்படுவதும் அத்தகைய உடன்படிக்கை தொடர்புறுத்தும் கருத்திட்டத்தின் மொத்தச் செலவு பத்து மில்லியன் ஐக்கிய அரசு டொலர்களுக்கு அல்லது வேறு ஏதேனும் நாணயத்தில் அதற்குச் சமமான தொகைக்குக் குறையாததுமான சுகாதார பராமரிப்புச் சேவைகளின் வழங்கல் தவிர்ந்த, அத்தகைய பராமரிப்பை வழங்கும் மருத்துவ நிறுவனங்களால் அல்லது உயர்தொழில் தகைமைபெற்ற ஆட்களினால் வழங்கப்படும் எல்லா சுகாதார பராமரிப்பு சேவைகளின் வழங்குகை.".

7. (1) இச்சட்டத்தின் 2(2) ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தம், அத்தகைய திருத்தம் கணனி மென்பொருளைத் தொடர்புறுத்துகின்றவரை, 1998 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்தள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். கடந்த காலத்தையும் உள்ளடக்கும் பயன்.

(2) இச்சட்டத்தின் 6(1) ஆம் பிரிவால் முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணைக்குச் செய்யப்பட்ட திருத்தம் 2000 யூலை 13 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**8.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை எற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

---

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர் அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.